மலர்: ஆ. ய Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை (21-09-1998) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 297

### மன்னாரில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 21
மன்னாரில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் பரதன் அல்லது பாரதி (சந்தான் அந்தோனி மகேந்திரன் — நறுவிலிக்குளம் வங்காலை) வீரச்சாவடைந்தார். (உ-ஏ)

# பாடசாலை மாணவரையும் ராணுவத்தில் சேர்க்க முடிவு

வடக்கு ராணுவ நடவடிக்கை முன்னேற்பாடாக

## சீனாவிடம் ரூ.1,000 கோடிக்கு ஆயுதங்கள் கொள்வனவு

கொழும்பு, செப். 21
வடக்கில் ராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கும் முன் சீனாவில் இருந்து ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்படும். இவற்றில் பல பீரங்கிப் படகுகளும் அடங்கும்.

பாதுகாப்பு வட்டார உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

வருட இறுதிக்குள் இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆயுதங்களை இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் இங்கு கொண்டு வருவதே பாதுகாப்பு அமைச்சின் நோக்கமாகும் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை —

விமானப் படையின் பாவனைக்கு வை - 8 (சீனத் தயாரிப்பு) ரக சரக்கு விமானங்கள் இரண்டை வெளி நாடு ஒன்றில் இருந்து குத்தகைக்குப் பெற்றுக் கொள்ள விமானப்படை அதிகாரிகள் பல வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே வை - 8 ரக விமானம் ஒன்று குத்தகைக்குப் பெறப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில் —

பிரான்ஸ் மெரைன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இலங்கை டொக்யார்ட் நிறுவனம் சுமார் 40 கோடி ரூபா செலவில் 4 கடற்படைப் படகுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாத இறுதிக்குள் அவற்றை நிர்மாணித்து தமக்கு கையளிக்குமாறு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் மோஹான் சமரசேகர டொக்யார்ட் நிறுவனத்தை கேட்டுள்ளார். (உ-ந)

## திலீபன் நினைவுநிகழ்வுகளில் நாளாந்தம் கூடுதல் மக்கள்

யாழ்ப்பாணம், செப். 21
தியாகி திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஆறாம் நாள் நேற்று தமிழீழப் பகுதி எங்கும் மிக எழுச்சியாக நடைபெற்றது. வழமையைவிட அதிக எண்ணிக்கையான மக்கள் அடையாள உண்ணாவிரதத்திலும், அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

நல்லூரில் நேற்றுக்காலை 7.10 மணிக்கு தியாகி திலீபனின் நினைவுத் தூபிக்கு தமிழீழ மாவீரர் மகளிர் துணைப் பொறுப்பாளர் செல்வி சுதா ஈகைச் சுடரேற்ற, யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சேந்தமிழன் மலர் மாலை அணிவித்தார். ஐந்து நிமிட நேர மௌனஞ் சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள பந்தலில் காலை 7.30 மணிக்கு தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு தீவக மாவீரர் மகளிர் பொறுப்பாளர் செல்வி சரோஜா ஈகைச் சுடரேற்றி, ஆரம்ப உரை நிகழ்த்தி, உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள், வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள், மணியரசன் வீடமைப்புத் திட்ட மக்கள், பொன்னம்மான் இராம மக்கள், திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய அங்கத்தவர்கள், கொக்குவில் இலங்கநாயகி சனசமூக நிலைய உறுப்பினர்கள் உட்பட பாடசாலை மாணவ மாணவிகளும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட
(6ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

## டி. பியின் போக்குக்கு இடம்விட்டு தொண்டா முயற்சியை கைவிட்டார்

கொழும்பு, செப். 21
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வகுத்திருக்கும் திட்டத்தை அவர் செயல்படுத்த இடம்விட்டு, அமைச்சர் தொண்டமான் தமது முயற்சியைக் கைவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தொண்டமான் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தாம் தயாரித்த யோசனைகளை அப்போது தொண்டமான் ஜனாதிபதிக்கு விவரித்தார்.

இச்சந்திப்பு குறித்து தொண்டமான் பின்னர் கூறியதாவது:-

''ஜனாதிபதியுடன் நான் பேசினேன்.

தாம் செயல்திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாகவும்-

அதனைச் செயல்படுத்தத் தாம் உறுதி பூண்டிருப்பதாகவும் —

அந்த செயல் திட்டத்தை நிறைவேற்ற சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தமது சொந்தக் கொள்கைகளை — அது யாருடைய ஆலோசனையின் பேரில் வகுக்கப்பட்டிருந்தாலும் — செயற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஜனாதிபதி தமது கொள்கையை இடைநடுவில் கைவிட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. — என்றார்.

## கொழும்பில் தமிழ் இளைஞர் "கோட்டா" முறையில் கைது

கொழும்பு, செப். 21
தினமும் குறிப்பிட்ட எண்ணிக்கையான தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொண்டு வரவேண்டும் என்று பொலிஸ் ரோந்துக் கோஷ்டிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் —

அதற்கிணங்கவே கொழும்பு மாநகரில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும் —

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் 'கோட்டா' முறையில் கைது செய்யப்படுவதாகக் கூறப்படுவதை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் மறுத்தார்.

சாட்சியத்தின் அடிப்படையில் — சந்தேகத்தின் பேரில் தான் இவர்கள் கைது செய்யப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

கொழும்பில் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர் [illegible] ரும் —

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பல தமிழர்களும் சட்ட பூர்வமான காரணமின்றி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை "சண்டே டைம்ஸ்" வெளியிட்டுள்ளது. தெஹிவளை, வை. எம். சி. ஏயில் தங்கியிருந்த சில தமிழ் [illegible] றும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா மாணவருக்கு படை அதிகாரி அழைப்பு

கொழும்பு, செப்டெம்பர் 21
பாடசாலை மாணவர்களையும் இராணுவத்தில் சேர்க்க ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருப்பதாக அறியவருகிறது.

இராணுவத்தில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு ஆரம்ப சம்பளமாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என்றும்—

அத்துடன் ஜெப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறுவதற்கும் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படும் என்றும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வெள்ளியன்று வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது அந்த இராணுவ அதிகாரி முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரில் உள்ள பிர
(6 ஆம் பக்கம் பார்க்க)

டி. பியின் தற்போதைய அறிவிப்பு

## ஐ.தே.கவில் உள்ள தமிழரின் முகத்தில் கிடைத்த உதை!

### குமார் பொன்னம்பலம் வர்ணனை

கொழும்பு, செப். 21
இலங்கையில் தமிழர் பிரச்சினை என ஒன்றுமே இல்லை என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறிய பின்னரும் ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ள தமிழரின் நிலை என்ன? இது குறித்து தமிழர்களுக்கு அவர்கள் உடனடியாக பதிலளிக்க வேண்டும்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன், கொழும்பு மாநகர பிரதி மேயர் கணேசலிங்கம், சட்டத்தரணி மோதிலால் நேரு ஆகியோர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

இந்த ரீதியில் ஜனாதிபதி பேசுவது குறித்து ஒருவழியில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நாட்டில் தமிழர் பிரச்சினை என ஒன்று இல்லை என்று அமைச்சரவையும் அரசும் இப்போது அபிப்பிராயப்படுவது குறித்தும் நான் மகிழ்கின்றேன். இப்புதிய நச்சுக் கொள்கை ஐக்கிய தேசியக்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## டி.பியின் இனவாத பேச்சுக்கு காமினி ஜயசூரியா பாராட்டு

ஜனாதிபதி விஜேதுங்காவைப் பாராட்டி சிங்கள பாதுகாப்புச் சங்கத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா, அவருக்கு தந்தி ஒன்றை அனுப்பிவைத்தார்.

நாட்டில் நிலவுவது தீவிரவாதப் பிரச்சினையே ஒழிய இன நெருக்கடி அல்ல என்று ஜனாதிபதி விஜேதுங்கா அம்பாந்தோட்டை மற்றும் ஹங்குராங்கெட்ட ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பேசியபோது தெரிவித்தார்.

அப்பேச்சுக்களைப் பாராட்டியே இத்தந்தி அனுப்பப்பட்டது.

''வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லை: நாட்டைப் பிரிக்க அனுமதிக்கமாட்டோம். தீவிரவாதத்தை அரசு ஒடுக்கும்— என்றும் தாங்கள் கூறியதை சிங்கள மக்கள் வரவேற்கிறார்கள். இந்த இலட்சியங்களை நீங்கள் அடைவதற்கு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிடைக்கும்'' — இவ்வாறு அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

றுகுணு கப்பலில் வடக்கே

## அமோனியா என்ற பெயரில் யூரியா கடத்த முயற்சியாம்!

கொழும்பு, செப். 21
அமோனியா உரம் என்ற பெயரில் யூரியா உரத்தை "றுகுணு" கப்பல் மூலம் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முயற்சித்ததாகக் கூறப்படும் மூன்று தமிழ் வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

'திவயின' மற்றும் 'சண்டே ஐலண்ட்' வார இதழ்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

கப்பலில் ஏற்றப்பட்ட உரப்பை ஒன்று கிழிந்ததை அடுத்து, இது குறித்து துறைமுகப் பணியாளர் ஒருவர் கடற்படையினருக்கு தகவல் தெரிவித்ததாகவும் —

அதனை அடுத்து 203 யூரியா பைகளை கடற்படையினர் கண்டுபிடித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடயம் அம்பலத்துக்கு வந்ததை அடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் தலைமறைவாகியிருப்பதாகவும்—

மேற்படி வர்த்தகர்களுக்கு உரம் அனுப்புவதற்கு அனு
(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

ஸ்தாபகர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

காலம் :- 1993 09–22 புதன்கிழமை முற்பகல் 9.00 மணி
தலைவர் :- திரு வீ கணேசராசா, - கோத்தணி அதிபர், நீர்வேலி -
பிரதம விருந்தினர் :- திரு. இரா. சுந்தரலிங்கம். - வடமாகில கல்விப்பணிப்பாளர் -
சிறப்பு விருந்தினர் :- திரு. இ. சிவானந்தன். - பிரதக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடம் -
திரு ஆ செந்தாளன், (பழைய மாணவர்) - தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி -
திரு இ. இளங்கோவன், - பிரதேச செயலர், (உதவி அ அதிபர்) கோப்பாய் -
திரு. த. நவரட்ணராசா, (பழைய மாணவர்) - செயலர், நகரசபை சாவகச்சேரி -
திரு. அ. அ. பாலசுப்பிரமணியம், (இளைப்பாறிய ஆசிரியர்) - ஸ்தாபகரின் புதல்வர் -
திரு க. ச. முத்துவேற்பிள்ளை, (எஸ் ஆர்.டி. ஓ.) - கல்லூரி ஆரம்ப முதல் மாணவன் -
பரிசில் வழங்கல் :- திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

18–09–93
(27383)

அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை.


# மட்டக்களப்பின் ஒரு பகுதி கொமாண்டோக்களிடமாம்

கொழும்பு, செப். 21

மட்டக்களப்பு தென்பகுதியில் காத்தான்குடி வரையான பாதுகாப்பை பொலிஸ் கொமாண்டோக்கள் இம்மாதம் பொறுப்பேற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையில் பொலிஸ் கொமாண்டோக்கள் செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, களுதாவளை, கிரான்குளம், ஆரைப்பற்றை மற்றும் மண்முனைப் பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரபூர்வ பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளரை மேற்கோள்காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நவம்பரில் மண்டூர், செங்கலடி காம்ப், குமாரசம மற்றும் 16, 18, 14, 10 ஆம் கொலனிகள் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு இராணுவத்திடம் இருந்து பொலிஸ் கொமாண்டோக்களுக்கு மாற்றப்பட்டது.

கிழக்கில் இருந்த இராணுவப் படையணிகளை விலக்கி அவற்றை வடபகுதியில் பயன்படுத்த ஏதுவாகவே கிழக்கில் பொலிஸ் கொமாண்டோக்கள் கூடுதலாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)


NEW ENGLISH ACADEMY

82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

G.C.E. O/L (Paper Class)

ஆரம்பம்: 21-09-1993

செவ்வாய் 10.30 மணி

குறிப்பு:- பிள்ளைகளின் வசதிக்கேற்ப இரு முழுவளாக வகுப்புகள் நடத்தப்படும். நேர அட்டவணையை தெரிந்து பெற்றுக் கொள்ளவும்.

By: R. SIVALINGAM (Dip. In. Eng)

(சி/6121)


# வேம்படி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 21

வேம்படி மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும். யாழ் பல்கலைக் கழக கணிதவியல் துறைத் தலைவர் பேராசிரியர் வே. தர்மரத்தினம். தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (அ)

# மின்னல் தாக்கி சிப்பாய் பலி

கொழும்பு, செப். 21

மணலாறு கிப்பன் அராவில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் கே. கே. பி. சில்வா மின்னல் தாக்கி மரணமானார் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ-5)

# வர்த்தகர் சுட்டுக் கொலை

கொழும்பு, செப். 21

கொழும்பின் பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கடந்த வெள்ளியன்று இனந்தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொழும்பு கோட்டையில் உள்ள ஆப்தீன் ஜுவலரி உரிமையாளரும், சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளருமான எம். ஜே. ஆப்தீன் (வயது 50) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரஸ்தாப வர்த்தகர் கடந்த வெள்ளியன்று மாலை 4 40 மணியளவில் வெள்ளவத்தை-காலி வீதியில் காரில் சென்று கொண்டிருந்த சமயம் வெள்ளவத்தையில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு அருகே தரித்து நின்றவேளை துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவரால் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# காயமுற்றோர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப். 21

முல்லைத்தீவு மாந்தை கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற "புக்காரா" விமானக் குண்டு வீச்சில் படுகாயமடைந்தவர்களில் 10 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15)


SCHOOL OF TALENT
VADDUKODDAI

SPECIAL ENGLISH CLASSES

★ Spoken Engish With Grammer.
★ G C E O/L 93 (PAPER CLASS)

By R. SIVA (DIP - IN - ENG)

ஆரம்பம்: 24 09 1993 வெள்ளி பிற்பகல் 4-00 மணி.

(அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன)

(சி/6120)



MATHS CENTRE
NELLIADY

A/L 94
(One Year Course)

Physics
திரு. ஜெயசீலன்
Tue P.M. 3.15

Pure/ Applied
திரு. அருளானந்தம்
Sat., Sun. A.M. 6.30

(சி/5948)


# வைத்தியசாலை ஊழியர்களுக்கு சைக்கிள்கள்

அரியாலை, செப். 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கென 47 சைக்கிள்கள் "குமண" கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

சைக்கிள்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்த ஊழியர்களுக்கே இவை வழங்கப்படவுள்ளதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)


யாழ். இந்து அன்னை கண்ணீர் வடிக்கின்றாள்

தமிழீழ விடுதலை வேள்வியில் மேலும் ஒரு அன்னையின் புதல்வன் ஆகுதியானான்.

கடற்புலிகள் பொறியியற்றுறைப் பொறுப்பாளர்

மேஜர் மூர்த்தியின்
(சந்திரசேகரம் – கிருஷ்ணமூர்த்தி)

இழப்பினை அறிந்து இந்துவின் சமூகம் ஆழ்ந்த கவலை அடைகிறது.

அவன் பாதையில் நாம்—

யாழ். இந்துவின் சமூகம்

(சி/5947)



மீண்டும் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்தி பகுதியினால் நடத்தப்பட்டு பின்னர் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயிற்சி வகுப்பு மீண்டும் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறவுள்ளது என்பதை பயிற்சியாளருக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

காலம்: 22-09-1993 தொடக்கம் 02-10-1993 வரை

| திகதி | நேரம் | விடயம் |
|---|---|---|
| 22 - 09 - 1993 | 9.30 — 10.30 | வீட்டு மின் இணைப்பு |
| | 11.00 — 12.30 | ,, |
| | 2.00 — 4.00 | மோட்டார் திருத்தம் |
| 23 - 09 - 1993 | 9.30 — 10.30 | பொறியியல் வரைதல் |
| | 11.00 — 12.30 | ,, ,, |
| | 2.00 — 4.00 | அமைப்புக்கள் வரைபடம் ஆக்குதல் |
| 24 - 09 - 1993 | 9.30 — 10.30 | உயிர்வாயு கூடம் |
| | 11.00 — 12.30 | ,, ,, |
| | 2.00 — 3.00 | இரட்டைச் சூட்டடுப்பு |
| | 3.00 — 4.30 | காற்று மின் பிறப்பாக்கி |
| 25 - 09 - 1993 | 9.30 — 10.30 | திட்டங்களை இனங்கண்டு திட்டறிக்கை தயாரித்தல் |
| | 11.00 — 12.30 | ,, ,, ,, |
| 27 - 09 - 1993 | 9.30 — 10.30 | ஏற்று / சூத்திரம் |
| | 11.00 — 12.30 | காற்றாலை |
| | 2.00 — 4.00 | பம்பிகள் |
| 28 - 09 - 1993 | 9.30 — 10.30 | துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 11.00 — 12.30 | துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 2.00 — 4.30 | மோட்டார் இயந்திர சாஸ்திரம் |
| 29 - 09 - 1993 | 9.30 — 10.30 | மோட்டார், துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 11.30 — 12.30 | ,, ,, ,, |
| | 2.00 — 4.30 | ,, ,, ,, |
| 01 - 10 - 1993 | 9.30 — 10.30 | சக்தியின் இன்றைய உடனடித்தேவைகள் |
| | 11.00 — 12.30 | சக்திப் பகுதியின் கட்டமைப்பு பரிசோதனை |
| | 2.00 — 4.00 | பரிசோதனை |
| 02 - 10 - 1993 | 9.30 — 10.30 | ஆய்வுகள் |

(சி-5946)



45 ஆம் நாள் நினைவஞ்சலி

பூலோகத்தில் 26 – 06 – 1943



விண்ணுலகத்தில் 08 – 08 – 1993

அமரர்
தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம்
(விவசாய உத்தியோகத்தர் பொலநறுவை)

எமதருமைத் தந்தையே
உங்களது சிரித்த முகத்தினை நாம் இனி
எப்பிறவியில் காண்போம்
உங்களது அன்பையும் அரவணைப்பையும்
நாம் இனி எப்போது பெறுவோம்
எங்கள் நெஞ்சம் நிறைந்தவரே
பாசம் உள்ள எம் இனிய அப்பாவே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை கண்ணீர்ப்பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம். இவ்வொளி விளக்கின் வீட்டு கிருத்தியங்கள் இன்று (21 - 09 - 93) செவ்வாய்க்கிழமை நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசமிகு பிள்ளைகள், குடும்பத்தினர்

அச்செழு,
நீர்வேலி.

(27382)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பெருமளவு படைகள் குவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

கிழக்கு மாகாணத்தில் மேலும் ஏராளமான படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இருந்தும், பொலன்னறுவையில் இருந்தும் பஸ்கள் மூலம் படையினர் மட்டக்களப்புக்கும், திருகோணமலைக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர் என்றும்—

பஸ்கள் மூலம் கொண்டு செல்லப்படும் படையினரின் பாதுகாப்புக்காக குறிப்பிட்ட நேரங்களில் அந்தப் பாதை பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்படுவதாகவும்—தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## தெய்யல் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலைக் கிளை படித்த யுவதிகளுக்கான ஒன்பது மாத தையல் பயிற்சி வகுப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளது. (க-117)

## தென்னிலங்கை செய்தியாளர் வருகின்றனர்

தென்னிலங்கையைச் சேர்ந்த செய்தியாளர் குழு ஒன்று இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

யாழ். மாவட்ட மக்களின் நிலை குறித்து தென்னிலங்கை மக்களுக்கு விளக்கும் வகையில் சமூக பொருளாதார முன்னேற்ற நடுநிலையத்தின் ஏற்பாட்டில் செய்தியாளர்கள் இங்கு வரவிருக்கிறது.

### புலிகளின் பலத்தை பரிசோதிக்க

# முதலில் சிறிய அளவிலேயே தாக்குதல் நடத்தப்படுமாம்

கொழும்பு, செப். 21

வடபகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீட்டெடுப்பதற்கான பாரிய இராணுவத் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர்—புலிகளின் பலத்தைப் பரீட்சிக்கும் நோக்கில் ஆரம்பமாகவே சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்பதற்கான நீண்டகால பாரிய இராணுவத் தாக்குதல் இட்டம் ஒன்றை தயாரிப்பதில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு ஈடுபட்டுள்ளது.

உடனடியாகவே வடபகுதி மீதான பாரிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படமாட்டா என இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இனி நடைபெறப்போகும் யுத்தம் நீண்டகாலம் தொடரும் என்பதால் படைப்பலத்தையும் ஆயுத பலத்தையும் அதிகரித்த பின்னரே இத்தாக்குதல் சாத்தியமாகும் என பாதுகாப்பு வட்டாரங்களில் பரவலாகக் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதில்லை என்பது அண்மைக் காலத்தில் அரசாங்கத்தின் மேடைப் பேச்சுக்களில் இருந்து தெரிய வருகிறது. இதனால் சமாதானப் பேச்சுவார்த்தை அருகி யுத்த மேகங்கள் சூழ ஆரம்பித்துள்ளன.

நடைபெறப் போகும் யுத்தம் நீண்டகாலம் தொடரும் எனப் பாதுகாப்புப் படையினர் எதிர்பார்ப்பதால் யுத்த காலத்தில் ஆட்களைத் திரட்டுவதைவிட யுத்தம் மூளும் முன்னரே படைகளுக்கு ஆட்களைத் திரட்டி பயிற்சி அளித்து போரை முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றனர்.

இராணுவத்துக்கு ஏற்கனவே 10 ஆயிரம் பேர் திரட்டப்பட்டுள்ளனர். கடற்படையினரும், விமானப்படையினரும் ஆட்களைத் திரட்ட பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 5)

## கருக்கொழுத்து கழக விழா

வடமராட்சி கருக்கொழுத்துக் கழகத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் திரு. எஸ். குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதோடு பரீட்சையில் சித்தி அடைந்தோருக்கான சான்றிதழ்களையும் வழங்கினார். (க-173)

## வீதி விளக்கு

நவாலி வடக்கில் சோமசுந்தரப் புலவர் வாழ்ந்த இல்லத்துக்கு அருகாகச் செல்லும் வீதியில் மாலை 6மணி முதல் நள்ளிரவு வரை வீதி விளக்கொன்றை டாக்டர் சே. சுந்தரராஜன் ஏற்படுத்தி தினமும் வெளிச்சம் ஏற்றி வருகிறார். (க-90)

# திலீபன் நினைவாக குடாநாட்டில் நாளை நடைபெறும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 21

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டி குடாநாட்டில் பல பகுதிகளிலும் வட்டார ரீதியான அடையாள உண்ணாவிரதம், சிரமதானம் என்பன நடைபெற்று வருகின்றன.

தியாகி திலீபனின் உண்ணா நோன்பின் எட்டாம் நாளான நாளை (புதன்கிழமை) அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

### வலிகாமத்தில்

★ சங்கானை — அரசடி வைரவர் கோவிலடியில், சங்கானை கிற்றூர் மக்கள்.

★ கோப்பாய் — நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோயில் முன்றலில், நீர்வேலி திலீபன், காமாட்சி அம்பாள் ச. ச. நிலையங்கள்.

★ சண்டிலிப்பாய் — ஆனைக்கோட்டை முத்தவிநாயகர் கோயில் முன்றலில் பண்ட/தெலி. தெ. ப. பொ. க. க. வி. சங்கங்கள்.

★ உடுவில்/தெல்லிப்பளை — சுன்னாகம் சிவன் கோயில் முன்றலில் ப. நோ. கூ. ச. தெ. ப. பொ. க. வி. க. ச. சங்கம்.

★ யாழ்ப்பாணம் — நல்லூர் — நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதி, கொக்குவில் மக்கள்.

### வடமராட்சியில்

★ கரவெட்டி — சாமியன் அரசடி, நெல்லியடி வர்த்தகர் சங்கம், கரவெட். கிழ/மத்தி, கிற்றூர் மக்கள்.

★ உடுப்பிட்டி—உடுப்பிட்டி மத்தி வைரவர் கோயிலடியில், தொண்டமானாறு தெற்கு.

★ பருத்தித்துறை — அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடியில், புலோலி கிழ. தும்பளை.

### தென்மராட்சியில்

★ பளை—பளை பிரதேச சபை முன்பாக, தம்பகாமம் கிற், பளை தோ. க. த. க. பாடசாலை.

★ கொடிகாமம் — ரயில் நிலையம் அருகில், கற்பகம் அம்பர் சமுத்திரன் ச ச நி. ஒட்டுவெளி மத்து. மாவீரர் ஸ்ரீசாந்தன் சூரியகுமாரன் ச. ச. நி. எழுதுமட்டு. ஸ்ரீ கணேசா வித்தி / குடமியன் இ. த. க. பாடசாலை.

★ சாவகச்சேரி — மணம்குணாய் பிள்ளையார் கோயில் அருகில், நுணாவில் கிழ. மட்டு, வட, நுணாவில் மத்தி, மட்டு, நுணாவில், மண்டுவில், - மட்டு தெற்கு அ. மி. த. க. பாடசாலை மகளிர் திற்தி.

★ கைதடி — கைதடி சந்திக்கு அருகில், கைதடி தெற்கு, கிற்றூர், கைதடி மேற்கு, கல்லாகம், கைதடி நாவற்குழி, அரச தமிழ் கலவன் பாடசாலை.

### தீவகக் கோட்டம்

★ நல்லூர் கோயில் முன்றலில், மயூரன் குடியிருப்பு வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், புங். அ. மிசன்.

### சிரமதானங்கள்

நாளை சிரமதானங்கள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ நீர்வேலி — திலீபன் பாடசாலை துப்புரவு.

★ உடுவில் — சித்து மு. துப்புரவு.

★ கோண்டாவில் பலா/கிராமம், கிராமம் துப்புரவு. (க)

# தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை எச். என். காலத்தில் ஏற்கப்பட்டது!

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 21

இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவராக அமரர் எச். என். இருந்த காலத்தில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்ற விடயம் முதன்முதலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இச்சங்கத்தின் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று முதன் முதலாக கோரிய தொழிற் சங்கம் ஒன்றின் தலைவரை தற்போது இந்நாடு இழந்துவிட்டது.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆசிரியர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. க. இராஜநாயகம்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவராகவும் பொதுச்செயலாளராகவும் விளங்கி அண்மையில் அமரத்துவம் அடைந்த அமரர் எச். என். பெர்னாண்டோவின் நினைவாக இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரி விடுதி மண்டபத்தில், வடமாகாண ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் திரு. த. தேவராஜா தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது;

1986 ஆம் ஆண்டு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் 8000 பிரதிநிதிகள் வரை கலந்து கொண்ட வருடாந்த மாநாட்டில் தமிழர் சுய நிர்ணய உரிமை உடையவர்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின் 1987 இல் காலியில் நடைபெற்ற இச்சங்கத்தின் மாநாட்டில் இது முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது.

இனப்பிரச்சினை பற்றியும், 50 வருடங்களாக இங்கே நடந்துவரும் நிகழ்வுகளை ஆராய வேண்டும் என்பதற்காகவும் எச். என். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த காலத்தில், நூல் நிலையமொன்றில் இருந்த சஞ்சிகைகளின் வெளியீடுகளை ஆராய்ந்து 6 மாத காலமாக குறிப்புகளை எடுத்தார்.

சிங்கள பேரினவாதம் பேசுவோர் மத்தியில் சிங்களவர் தான் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்று சொல்லுவதற்கு மாறாக தமிழ் மக்கள் தான் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்று கூறி நிரூபிக்கும் அளவிற்கு அவர் குறிப்புகளை எடுத்திருந்தார்—என்று சொன்னார்.

மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது. வண. பிதா ஜெயசிலன், தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதி, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் உட்பட பல தொழிற் சங்க பிரதிநிதிகளும் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள். இறுதியில் வடமாகாண ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளர் திரு. கே. சிவராஜாவின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 – 10 – 1916

மறைவு 22 – 08 – 1993

### அமரர் இராசா இராமசாமி

[இளைப்பாறிய ஆசிரியர்]

வளலாய் - அச்சுவேலி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
அமைதியே உருவான அன்புத் தந்தையே
எங்களுக்கு அன்பும் அறிவும் ஊட்டி ஆசிதந்து
வாழவைத்த தெய்வமே!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் நாள் முப்பத்தி ஒன்று ஆகியும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்து ஒளிவிளக்காய் இருக்கும்! உங்கள் ஆத்மா சாந்தியடைய சித்திவிநாயகனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்போதைய முகவரி:
சரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(27881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கறுப்பு வெள்ளை நிறங்களில் பட்டனீஸ் வகை நாய்க் குட்டிகள் (புதிய இனம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(6497)

### மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது, உத்தராடம், நாவில் செவ்வாய், அழகிய ஆசிரியைக்கு உள்ளூர் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர் ஆசிரியரும் விரும்பத்தக்கது சீதனம் கொடுக்கப்படும். க. மாணிக்கவேல், 16/11, சிவியர் லேன், யாழ்ப்பாணம்.
(27379)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி பெற குறைந்த தகைமை க. பொ. த. சாதாரணதரம். நேரில் வர முடியாதோர் தபாலிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, 78, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(27369)

### PITMAN

Business Commercial Type - Writting புத்தகம் மலிவு விலையில் உண்டு. வியாபாரிகளுக்கு கழிவு விலையில் வழங்கப்படும். மக்மிலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-6114)

## இற்றாலய விழா

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆரோக்கிய அன்னை வேளாங்கண்ணி மாதா இற்றாலய விழா எதிர் வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் மாலை 5-15 மணிக்கு நடைபெறும்.

26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30மணிக்கு யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாட் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (க-17)

### புராணப் படிப்பு

பருத்தித்துறை சிவன் கோயில் திருவிளையாடற் புராணப் படிப்பு கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. அக்டோபர் 1 ஆம் திகதி படிப்பு நிறைவுறும். (க-30)


**94 A/L**
**DAY CLASSES**
விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்:- 21-09-93
8.00 மணி
Science College
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ/5942)


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சங்க

## பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 30 - 09 - 1993 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு. கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதுவரை சந்தாப் பணம் செலுத்தாதோர் கல்லூரி அலுவலகத்தில் செலுத்தி உறுப்புரிமையை உறுதி செய்து கொள்ளவும்.

பிரேரணை சமர்ப்பிக்க விரும்புவோர், எழுத்து மூலமாக 25 - 09 - 1993 இற்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பும்படி வேண்டப் பெறுகின்றனர்.

- அதிபர்.

(இ-5944)

## 31ஆம் நாள் நினைவலைகள்

### திருமதி தனலக்சுமி குமாரசுவாமி

(ஆசிரியை, யா/கோண்டாவில் சி. வி. த. க. பா.)

ஆசிரிய உலகினுக்கோர் அறிவுக் களஞ்சியமே
காரிகையே உனைப் பிரிந்து கலங்குகின்றோம் -
நாயிருபது
சரெட்டு ஆண்டு காலம் எம்முடனே இணைந்திருந்த
பேரறிவின் பெரு மகளே
ஆத்ம சாந்தி வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். கோண்டாவில் இந்து ம வி.

(27365)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### சற்குணலிங்கம் அனுஷன்

(கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவன்)

அன்னையின் மடியில்: 30 — 10 — 1981
ஆண்டவன் அரவணைப்பில்: 21 — 09 — 1991

நெஞ்சம் மறக்குமா நினைவலைகள்
மறைந்திடுமா
எம் அம்மன் அனுஷன் குறுமொழி
கேட்காதா - அவன்
அன்பு முகம் வந்து கவிதை தர மாட்டாதா
ஆண்டிரண்டு போனதிங்கு ஆனாலும்
மீண்டும் வந்து பிறந்திடுவாய்
மேதினியில் எம்மகனே!

அன்பு அப்பா, அம்மா, அக்கா,
அம்மம்மா, ஆச்சி, சித்தப்பாமார்,
தாத்தா, மாமாமார், அத்தைமார்,
சித்தி, அன்ரிமார், அங்கிள்மார்,
மற்றும் உடன்பிறவா சகோதரர்கள்.

நா. சற்குணலிங்கம்,
பூநாறி மரத்தடி,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(27354)

# குடாநாட்டில் போர்க் கூத்து

யாழ்ப்பாணம், செப். 21

விடுதலைப்புலிகள் யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில், குடாநாட்டில் போர்க்கூத்து நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன.

ஸ்ரீலங்கா அரசும், சிங்கள இராணுவமும் தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக மேற்கொண்டு வரும் அழுத்தங்களை —

சவால்களை தகர்த்தெறியும் வகையில்—

தமிழீழ மக்கள் எழுச்சி யடையவைக்கும் மேற்படி போர்க் கூத்து நிகழ்ச்சியினை பெருந்திரளானோர் கண்டு களித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று உடுவில்- மல்வம்; உதயசூரியன் சனசமூக நிலைய முன்றலிலும் சனியன்று உடுவில் சஞ்சடி வைரவர் கோயிலடியிலும், உடுவில் வடக்கு டச்சு றோட் பகுதியிலும் போர்க் கூத்து இடம் பெற்றது. (ஒ)

# வழிபாட்டு தலங்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 21

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் உட்பட வழிபாட்டுத் தலங்கள் மீது கடந்த மாதம் படையினர் நடத்திய தாக்குதல்களை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் கண்டித்துள்ளது.

சம்மேளனத்தின் நிர்வாகச் சபைக் கூட்டத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மான அறிக்கை யாழ். அரச அதிபருடாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலிகாமம் தெற்கு, மேற்கு, தென்மேற்கு பகுதிகளில் கடந்த மாதம் 18 ஆம் திகதி விமானத்தாக்குதல்களாலும், கரையோர கடற் பிரதேசத் தாக்குதல்களாலும் பலாலி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினாலும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில், வைரவர் ஆலயம், சுழிபுரம் சிவன்கோவில் பறாளாய் முருகமூர்த்தி கோவில் போன்ற வழிபாட்டுத் தலங்களும். பொது மக்களின் வசிப்பிடங்களும் சேதமாக்கப்பட்டும், தரைமட்டமாக்கப்பட்டும் உள்ளன. சிறுவர், முதியோர், நோயுற்றோர் என அப்பாவிப் பொதுமக்கள் பலர் இறந்தும் காயப்பட்டும் உள்ளனர்,

இது போன்ற கண்மூடித்தனமான வன்செயல்கள் தொடர்ந்தும் இடம் பெறாது தவிர்க்க ஆவன செய்யுமாறு சம்மேளனம் தங்களைக் கேட்டுக் கொள்கிறது — இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(த-5)

### வவுனியாவில்

# வடபகுதிப் பயணிகள் தங்குவதற்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப் 21

வடபகுதியைச் சேர்ந்த பயணிகள் வவுனியாவில் 8 நாட்களுக்கு மட்டுமே தங்க இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

வடபகுதியிலிருந்து வவுனியா செல்லும் பயணிகள் வவுனியா பகுதி கிராம சேவகர் உத்தியோகத்தர்களின், அத்தாட்சியுடன் வவுனியா பொலிஸாரின் அனுமதிபெற்று 3 நாட்கள் அங்கு தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வடபகுதி பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(த-17)

# வன்னியில் கடும் வரட்சி

வன்னிமாவட்டத்தில் கடும் வரட்சி நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பூநகரி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெரும்போக நெற்செய்கையும் இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்போக நெற் செய்கைக்கு மழை வேண்டி இப்பகுதி மக்கள் பிரார்த்தனையிலும் ஈடுபட்டுள்ளனர். (த-17)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். கண்டிக்குளி மகளிர் கல்லூரி வணிக மன்றத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | இல. | 3332 |
| 2 ஆம் பரிசு | இல. | 0496 |
| 3 ஆம் பரிசு | இல. | 3663 |

இப்பரிசிற்குரியவர்கள் எதிர்வரும் 24-09-93 இற்கு முன்னர் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

- வணிக மன்றம்.

(27880)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம் / ...சபை மன்றம் / யாழ்ப்பாணம்

## உதயன்

### கடல் தடையும் மீனவர்களும்

ஸ்ரீலங்கா அரசின் கடல் தடைச் சட்டம் மற்றும் கடற்படையினரின் தாக்குதல்கள் —

மீன்பிடிப் படகுகள் மற்றும் வள்ளங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் —

இவை காரணமாக வடக்கு-கிழக்கில் பல்லாயிரக் கணக்கான கடற்றொழிலாளர்கள் தொழில் இழந்துள்ளனர்.

கடல் தடைச் சட்டம் காரணமாக மேற்குக் கரையோரத்தில், மன்னார் நகரின் வடபகுதியில் இருந்து கிழக்குக் கரையோரத்தில் திருகோணமலை நகர் வரையிலான கடல் பிராந்தியத்தில் எவரும் கடற்றொழில் செய்ய முடியாது.

இந்திய அரசாங்கத்தின் அழுத்தல் காரணமாக கடல் தடைச் சட்டம் இந்திய மீனவர்களைப் பாதிக்காத விதத்தில் சிறிய அளவு தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் வடபகுதி மீனவர்கள் விடயத்தில் எந்தவித பிரயோசனமும் இல்லை

சட்டத்தை மீறி கடலுக்குச் செல்வதானாலும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

இப்படியான நிலையில் வடபகுதி கடற்றொழிலாளர்கள் பெரும் பட்டினி நிலையை எதிர்நோக்கி உள்ளனர். இவர்களுக்கு முழு அளவில் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடல் சட்டம் காரணமாக கடலில் காணப்படும் மீன்பிடிப் படகுகள், வள்ளங்கள் மீது கடற்படைப் படகுகளில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

கடலில் மட்டும் அல்ல கரையோரங்களை நோக்கியும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுவது வடமராட்சி பகுதியில் நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது.

கரையோரப் பகுதிகளை நோக்கி நடத்தப்படும் தாக்குதல்களுக்கு அஞ்சி கரையோரப் பகுதிகளில் வசித்து வந்த கடற்றொழிலாளர்கள் பெரும் அளவில் உள்ளூருக்குள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஒட்டு மொத்தமாக முழு அளவில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் வடக்கு-கிழக்கு கடலின் வளங்கள் ஸ்ரீலங்காவின் முழுத்தேவையும் அனேகமாக நிறைவு செய்யக் கூடியவையாக இருந்தன.

பின்பு அரசாங்கம் கடல் வலயச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களை காலத்துக்குக் காலம் கொண்டு வந்து வடபகுதி மீனவர்களின் ஆழ் கடல் மீன்பிடித் தொழிலுக்கு ஆப்பு வைத்தது.

தற்போது கடைசியாகக் கொண்டு வரப்பட்டுள்ள கடல் தடைச் சட்டம் கரையோரங்களில் மீன்பிடிக்கும் உரிமையையும் மறுப்பதுடன் மீனவர்கள் கரையோரங்களில் வாழ முடியாத நிலையையும் தோற்றுவித்திருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை இன ஒழிப்பு, தமிழரின் பொருளாதார அழிப்பு என்ற இரு நோக்கங்களையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கிறது.

வடக்கில் கடல் தடைச் சட்டத்தை விதித்துள்ள ஸ்ரீலங்கா அரசு கிழக்கில் அதாவது மட்டக்களப்பு பகுதியில் மற்றும் ஒரு விதத்தில் கடல் தடையை அமுல் செய்கிறது.

அங்கு தமிழ் மீனவர்களின் படகுகள் கடற்படையினராலும் முஸ்லிம்களினாலும் சேதப்படுத்தப்படுகின்றன.

1992 ஜூன் முதல் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் மட்டக்களப்புப் பகுதியில் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் பெறுமதி 4 கோடியே 50 லட்சம் ரூபா.

ஆகவே அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் கடற்றொழிலை திட்டமிட்டு நசுக்கி வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய நிலையில் மீனவர்களுக்கு முழு அளவில் நிவாரணம் கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்க உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலமே மீனவர்களை பட்டினி நிலையிலிருந்து காப்பாற்ற முடியும்.

# பேச்சுவார்த்தையின் அவசியம் குறித்து ரணிலிடமும் ஆயர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 21

""இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்""

இப்படியான கோரிக்கையை யாழ் மன்னார் ஆயர்கள் ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் விடுத்துள்ளார்.

கொழும்பில் ஆயர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த யாழ் ஆயர் அதி. மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் மன்னார் ஆயர் அதி மேதகு இராயப்பு ஜோசேப் ஆண்டகையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்த சமயமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆயர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதமர் அலுவலகத்தில் நடந்த இச்சந்திப்பில் ஆயர்கள் பலதரப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

பொருளாதாரத் தடைநீக்கம், போதுமான மருந்தும், எரிபொருளும் அனுப்புதல், யுத்தக் கைதிகள் விடுதலை, குண்டுவீச்சை நிறுத்தல் போன்ற விடயங்கள் குறித்து இக்கலந்துரையாடலில் ஆயர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

மண்டைதீவு சம்பவம் எதிரொலியாக கிளாலியில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை குறித்தும் ஆயர்கள் எடுத்துக் கூறினர்.

யாழ். ஆயர் அதி. மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவையும் சந்தித்து இதே கோரிக்கையை விடுத்திருந்தது தெரிந்ததே. (இ-3)

## 'றுகுணு' இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், செப். 21

875 மெற்றிக் தொன் உணவுகளுடன் கொழும்பில் இருந்து புறப்பட்ட 'றுகுணு' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

## குமணவில் செல்வோருக்கு

யாழ்ப்பாணம், செப். 21

'குமண' கப்பல் மூலம் இங்கிருந்து திருமலை செல்ல விண்ணப்பித்துள்ளவர்கள் நாளை புதன் காலை 8.00 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது பயணச் சீட்டுக்களில் நாளை கையொப்பமிட்டு உறுதிப்படுத்திக் கொள்பவர்களே கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் குடும்ப மீள் சேர்தல் திட்டத்தின் கீழ் பயணம் செய்ய உறுதிப்படுத்தப்பட்டவர்களும் —

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வளாகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-5)

## சித்த மருத்துவ போதனைக்கு கைதடி ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், செப். 21

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையை ""யாழ்ப்பாண சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை"" யாக மாற்றுவதற்கான பணிப்புரையை ஆயுள்வேத ஆணையாளர் வைத்தியசாலைப் பொறுப்பாளருக்கு விடுத்துள்ளார்.

கொழும்பு சென்றிருந்த கைதடி சித்த மருத்துவ மாணவர் மன்றப் பிரதிநிதிகளும் சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் பவானியும் ஆயுள்வேத ஆணையாளருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. உ-3

## அடுத்தமாத முற்பகுதியில் இருகட்சிகள் இணைப்பு

கொழும்பு, செப். 21

ஐக்கியதேசியக் கட்சியும், ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் அடுத்தமாத ஆரம்பத்தில் இணையலாம் என்று தற்போது நம்பகமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னர் இந்த இணைப்பு இடம்பெறவேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா விரும்புகின்றாராம்.

வெளிநாடு சென்றுள்ள அமைச்சர்கள் அனைவரும் அடுத்தமாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பிவிட வேண்டும் என்று ஜனாதிபதி பணித்துள்ளார் என்றும் அதற்கும் இணைப்பு விவகாரமே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஜ.ஐ.தே.மு. தலைவர் காமினி திஸநாயக்காவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க வசதியாக ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம்.பியான அலெக் ரொபட்ஸன் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளார் என்றும் —

காமினி திஸநாயக்கா எம்.பியானால் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-த)

## கண்ணிவெடியில் சிக்கி சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், செப். 21

கடந்த புதனன்று காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் நால்வர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை — ஏறாவூர் பகுதியில் ரோந்து சென்ற பொலீஸார் மீது கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# வடக்கு-கிழக்குக்கு பிரதேச ஆயுள்வேத ஆணையாளர்

## நியமிக்க சித்த மருத்துவ மாணவர் மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 21

""வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு பிரதேச ஆயுள்வேத ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்""

இப்படியான கோரிக்கை ஒன்று யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர் மன்றத்தால் ஆயுள்வேத ஆணையாளரிடம் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் ஆயுள்வேத ஆணையாளரை சந்தித்த மாணவர் மன்றப் பிரதிநிதிகள் இக்கோரிக்கையை விடுத்தனர்.

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் சில கோரிக்கைகள் வருமாறு:

★ வைத்தியசாலைகளுக்கு சித்த மருத்துவ பட்டதாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஆயுள்வேத ஆணையாளருக்கே இருக்க வேண்டும்.

★ பரம்பரை சித்த வைத்தியரைப் பதிவு செய்தல் சம்பந்தமாக ஒரு குழுவை அமைத்து நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும்.

★ கைதடி சித்தபோதனா வைத்தியசாலை வெற்றிடங்களை உடன் நிரப்ப வேண்டும்.

★ கைதடி சித்தபோதனா வைத்தியசாலைக்கு பிரசவ விடுதிக்கு மருந்துகள், உபகரணங்கள் மற்றும் அம்புலன்ஸ் வழங்க வேண்டும். (இ-3)

# தமிழின விடுதலைக்காக தன்னுயிர் தந்தவன் திலீபன்

## நினைவு தின நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், செப் 20

உறுதியான ஒரு இலட்சியப் போரில் தமிழினத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்தவன் திலீபன். அவனது அகிம்சைப் போர் நாம் ஆயுதப் பிரியர்களல்ல. அமைதியை விரும்புபவர்கள் ஆனால் அடக்கு முறைக்கு அடி பணிய மாட்டோம் என்ற தமிழினத்தின் திடத்தை உலகுக்கு உணர்த்தியது.

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நல்லூரில் நடைபெறும் அடையாள உண்ணாவிரதத்தின் நான்காவது நாளான நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் நல்லூர் வட்டப் பொறுப்பாளர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

பாதுகாப்புக்காக இந்தியாவிடம் மண்டியிட்ட ஸ்ரீலங்கா அரசு எம்மை அழிக்கவென்கங்கணம் கட்டியது. அந்த நோக்குடனேயே ஒப்பந்தம் செய்தது. எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வேறு எவரும் எமது விடுதலையைப் பெற்றுத் தருவார்கள் என எதிர்பார்த்திருக்கக் கூடாது. நாமே நமது வலிமையால் அதனைப் பெற முயற்சிக்க வேண்டும். இதைத்தான் தியாகி திலீபன் உண்ணாவிரதம் எமது மக்களுக்கு இன்றும் உணர்த்துகிறது என்றார்.

பெருந்திரளான மாணவர்களும் பொது மக்களும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். பிற்பகல் 5 மணிக்கு திரு. எழிலன் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். (த-111)

## செய்திக் கொத்து

### கௌரவிப்பு வைபவம்

யாழ் செயலகத்தில் கடந்த 10 ஆம் திகதி சிமெந்து கூட்டுத் தாபனத்தில் 25 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்த உதவிப்பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு சி வேலாயுதம், பொறியியலாளர் திரு. சி. செல்லச்சாமி, படவரைஞர் திரு வி. மகேந்திரா, பதில் நிலை உத்தியோகத்தர் திரு. கே. சிவலிங்கம் ஆகியோருக்கு தங்க விருது அளித்துக் கௌரவிக்கும் வைபவம் நடைபெற்றது (க)

### சுற்று நிருபம்

அரச உள்ளூராட்சி ஊழியர்களுக்கு கடந்த ஜூலை முதல் வழங்கப்படாதிருந்த சம்பள உயர்வை வழங்குமாறு பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 15-08-93 திகதிய (37/92 iii) இலக்க சுற்று நிருபம் இம் மாதம் 10 ஆம் திகதி சகல திணைக்களங்களுக்கும் கிடைத்துள்ளது என அறிய வருகின்றது. (க-117)

### ஷெல் தாக்குதல்

பூநகரி ஞானிமடத்தடியில் இருக்கும் இராணுவத்தினர் அண்மைக்காலமாக ஆலங்கேணியை இலக்கு வைத்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதால் ஆலங்கேணி மக்கள் தினமும் இரவு வேளைகளில் உப்புவெளி காட்டுப் பிரதேசத்துக்குச் சென்று தங்கி வருகின்றனர் என அறியப்படுகிறது (க-17)

### பாடசாலை விளையாட்டு உபகரணங்கள்

கிளிநொச்சி பாடசாலைகளுக்கென கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் தற்போது கிளிநொச்சி கல்வித் திணைக்களத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவை காலக்கிரமத்தில் பாடசாலைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (க-97)

### நிவாரண கோரிக்கை

வலி. கிழக்கில் உள்ள 1271 சிமெந்துக் கூட்டுத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டும் என சிமெந்துக் கூட்டுத் தொழிலாளர் சங்க கோப்பாய்க் கிளை வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்துக் கோரியுள்ளது. (க-11)

### பங்கீடு

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வந்த சர்க்கரை, பாக்கு ஆகியவற்றை பங்கீட்டு அட்டைக்குப் பாவனையாளர்களுக்கு வழங்கி வருகிறது (க-173)

### தடுப்பூசி

வடபிராந்திய சுகாதார திணைக்களம், இடம் பெயர்ந்து முகாம்களில் இருக்கும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (க-161)

## நல்லையில் அறிந்த தியாகம்

மாமா! மாமா! திலீபன் மாமா!
கோட்டையை இன்று பாருங்கள் - அங்கு
புலிக்கொடி பறப்பதைப் பாருங்கள் - உங்கள்
தாகம் தீர்த்துக் கொள்ளுங்கள்

வீதிகள் தோறும் உங்கள் உருவம்
நிமிர்ந்து நிற்பதைப் பாருங்கள் - பாலர்
நாங்கள் ஆடியும் பாடியும் - உங்களை
நினைவு கொள்வதைப் பாருங்கள்

கோட்டையில் உங்கள் உறுதி அறிந்தோம்
வல்லையில் உங்கள் வீரம் தெரிந்தோம்
நல்லையில் உங்கள் தியாகம் அறிந்தோம்
பாலர் நாங்கள் உறுதி பெற்றோம்.

— செல்வி காயத்ரி.

## வனம் பேணிட கவனம் செலுத்துவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேஜர் மூர்த்தி மாஸ்டருக்கு நேற்று மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 21

முல்லைத்தீவு மாவட்டம் மாத்தளன் பகுதியில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவடைந்த மேஜர் மூர்த்தி மாஸ்டரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக நேற்று குடாநாட்டின் பல இடங்களில் வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை போலி கண்டியில் உள்ள அவரது இல்லத்திலும், பிற்பகல், 1.30 மணியளவில் யாழ். சந்தர் மடம் சனசமூக நிலையத்திலும் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. தொடர்ந்து புகழுடல் வடமராட்சிக்கு கொண்டு செல்லப்பட்டு இமையாணன் குஞ்சர் கடை சனசமூக நிலையத்திலும், பருத்தித்துறை புதிய நகரம், பொலிகண்டி ஆகிய இடங்களிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது நூற்றுக் கணக்கான மக்கள் அவரது புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் நேற்று மாலை அவரது புகழுடல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.

1985 ஆம், 86 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கேணல் கிட்டு வுடன் இணைந்து சந்தர்மடம் பகுதியில் பண்டிதர் சரணாலயம் நிறுவுவதற்கு முழுமையாக உழைத்து அதன் பொறுப்பையும் மேஜர் மூர்த்தி மாஸ்டர் ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் சந்தர்மடம் பகுதி மக்களின் அன்பை பெற்றவராக விளங்கினார்.

இந்தியப் படைகள் இங்கிருந்து வெளியேறிய பின் வடமராட்சிப் பகுதிக்கு வந்த மேஜர் மூர்த்தி மாஸ்டர் கடற்புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்களில் பங்கு கொண்டார்.

போராட்டத்தில் இணைந்து கொள்ளுமுன்னரே—1972ஆம் ஆண்டுக்கு முன் — யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற வேளை அரசுக்கு எதிரான பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

(உ-5)

# அரசியல் தீர்வு காணும் எண்ணம் டி. பீக்கு தற்போதைக்கு இல்லை

கொழும்பு, செப். 21

அரசாங்கம் அடுத்த வருடம் தேர்தலை எதிர்நோக்கி இருப்பதால் இனப்பிரச்சினைக்கு தற்போதைக்கு அரசியல் தீர்வு காணும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை.

தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பாத சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் அமைச்சர்களுடன் நடத்திய மந்திராலோசனையின் போதே தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளிப்படுத்தியதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை ராணுவ நடவடிக்கை மூலம் முறியடிக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு என்று அவர் சொன்னார்.

## மாணவர் உணவு முத்திரை நிலுவை:

# செயலகத்திடம் ரூ.4 கோடி கோரி ப. நோ. கூ. சங்கங்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 21

மாணவர் உணவு முத்திரைக்கு பொருள் விநியோகம் மேற்கொண்டது தொடர்பான நான்கு கோடி ரூபா நிலுவையை யாழ். செயலக சமூக சேவைப்பகுதி இதுவரை தங்களுக்கு வழங்காததைக் கண்டித்து ப.நோ.கூ.சங்கங்கள் போராட்டம் ஒன்றை நடத்த முன்னிவு செய்து வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைகளுக்கான பொருள் விநியோகத்தை 92 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 93 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய 5 மாதங்களுக்கு மேற்கொண்டதன் பேரில் யாழ். செயலக சமூக சேவைப் பகுதி யால் ப.நோ.கூ.சங்கங்களுக்கு 4 கோடி ரூபா வழங்க வேண்டியுள்ளது.

இந்நிதி கிடைக்காததால் ப.நோ.கூ.சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடி நிலையில் உள்ளதாகவும்—

இந்த நிலுவைப் பணத்தைக் கோரி ப.நோ.கூ.சங்கங்கள் போராட்டம் நடத்த முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## அமோனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதியளித்த அரச அதிகாரிகளுடன் பொலீஸார் பேசவிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் குண்டு தயாரிப்பதற்கு யூரியாவைப் பயன்படுத்துவதனால் அதனை வடக்கே எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டதாகவும்—

ஆனால் புலிகள் இவ்வாறு படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பெரும் தொகையான யூரியாவை வடக்கே கொண்டு சென்றிருப்பதாகவும் அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதேபோல, டோர்ச் பற்றரி, பெற்றோல், டீஸல் முதலியனவும் பெருமளவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

—இவ்வாறு அச்செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ.எ-6)

## கண்ணீர்ப் புகை குண்டு வீச்சு!

கொழும்பு, செப். 21

அரசுக்கு எதிராக பெலியத்தையில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் போது, பேரணியில் சென்ற ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

ஸ்ரீ. ல. சு. கவின் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பியான மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்தப் பேரணி நடைபெற்றது

எனினும் இதன் பின்னரும் நகரின் மத்தியில் அரச எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. (உ-6)

## பாடசாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல பாடசாலைகளில் ஆண்டு 10 வகுப்புக்கு மேல் கல்வி கற்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்காக அந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

"இராணுவத்தில் சேர விரும்பும் மாணவர்கள் வடக்கு—கிழக்கு பகுதிகளில் கடமையாற்ற விரும்பினால் அவர்களுக்கு சம்பளத்துடன் மேலதிகமாக 600 ரூபா ஊக்குவிப்பு பணம் வழங்கப்படும். ஆகவே இராணுவத்தில் சேர விரும்புவோர் உடன் சேர்ந்து கொள்ளுங்கள் உங்களைக் கட்டாயமாகப் படையில் சேர்ப்பது எமது நோக்கமல்ல. அப்படி நாம் செய்யவும் மாட்டோம்." —என்றார்.

[உ-5]

## ஐ தே கவில் உள்ள..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியில் உள்ள தமிழர்களின் முகவிகளுக்கு கிடைத்த உதையாகும். அவர்களின் நிலை இன்று என்ன? தங்கள் நிலை குறித்து தமிழ் மக்களுக்கு அவர்கள் உடனடியாக பதிலளிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பகலிலும் சுதந்திரக் கட்சிக்கு இரவிலும் நிதி வழங்கும் தமிழ் வர்த்தகருக்கு இது நல்ல பாடமாகும், இவர்கள் தமிழ் மனச்சாட்சிப் புண்ணுக்கு மருந்து கட்டுவது போன்று எம்மைப் போன்றவர்களைச் சந்திக்கும் போது மட்டும் "எமது பிரச்சினைக்கு தீர்வு இல்லையா"—என்று கேட்டு வந்துள்ளார்கள்.

அரசின் கூலிப்படைகளாக ஈ.பி.டி.பி., ரெலோ மற்றும் புளொட் ஆகியன இயங்கி வருகின்றன. அவர்கள் இன்று எங்கே நிற்கின்றார்கள்? அரசுக்கு அவித்து வரும் ஆதரவை அவர்கள் உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும்.

தீவிரவாதம் பற்றி அரசு பேசுகிறது. பேச்சுகளுக்கு முன்பாதாக விடுதலைப் புலிகளை நசுக்கி ஆயுதங்களை கீழே போடவைக்க அரசு விரும்புகின்றது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் உடன்பாடு ஒன்று கண்ட பின்னர் தான் தனது பிஸ்டலை வைத்தார் என்பதை அரசுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

40 சத வீதத் தமிழர்கள் வடக்கு—கிழக்குக்கு வெளியே வாழ்வதாகவும் கொழும்பு மாநகரம் தமிழர்களால் நிரம்பி வழிவதாகவும் ஜனாதிபதி கூறுகிறார்.

இதற்குக் காரணம் தமிழ்ப் பகுதிகளில் அரசின் கண்மூடித்தனமான விமானத்தாக்குதல் என்பதை அவர் உணருவாரா?

பொருளாதார முற்றுகை மூலம் அரசு தமிழர்களைப் பட்டினி போடுவதும் இதற்கு ஒரு காரணம் என்பதை ஜனாதிபதி உணர்வாரா?

இந்த நிலைவரம் துக்ககரமானது மட்டுமல்ல கோமாளித்தனமானதும் கூட.

1993 இல் வடக்கு கிழக்கு நெருக்கடியை தீவிரவாதம் என்று ஜனாதிபதி கூறுகிறார். தெற்கிலும் மேற்கிலும் 1956, 1958, 1977, 1979, 1983ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தீவிரவாதத்தை ஜனாதிபதி மறந்து விட்டாரா? யார் தீவிரவாதத்தை ஆரம்பித்தது? இதற்குப் பதிலளிக்க ஒருவருக்கு மனசாட்சி இருக்க வேண்டும்.

தமிழருக்கு பாடசாலைகளும் வீடுகளும் கொடுத்தாயிற்று; இன்னும் என்ன கொடுக்க வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி கேட்கிறார்.

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு, உரிமைகளுக்கும் எலும்புத்துண்டுகளுக்கும் இடையேயான வித்தியாசம் தெரியவில்லை.

தமிழர் பகுதிகள் வீடுகளும் பாடசாலைகளும் இல்லாத காட்டு பகுதிகள் என்று அவர் எதிர்பார்க்கிறாரா?

தமிழருக்கு பாரம்பரிய தாயகம் இல்லை என்று கூறுபவர்களின் வாதம் இது அல்ல. — இவ்வாறு திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (உ-எ)

## திலீபன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

மணியரசன் வீடமைப்புத் திட்ட மக்களும், திலகர் கொத்தணிப் பாடசாலை ஆசிரிய மாணவர்களும் ஒன்றிணைந்து தியாகி திலீபனின் திருவுருவப்படம் அமைக்கப்பட்ட ஊர்திகள் ஊர்வலமாக ப. நோ. கூ. ச. அலுவலகத்திலிருந்து நல்லூருக்கு எடுத்து வந்தனர் ஊர்தியுடன் காவடிப் பவனியும் இடம் பெற்றது.

தியாகி திலீபன் நினைவாக நேற்று கொட்டடியிலும் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. கடற்புலிகளின் வலிகாமம் கோட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. ஜோன்ஸன் தியாகியின் படத்துக்கு மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார்.

தென்மராட்சியில்

கொடிகாமத்திலும் அடையாள உண்ணாவிரதம் இடம் பெற்றது. தென்மராட்சி அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் அங்கு உண்ணாவிரதத்தை தொடக்கிவைத்தார்.

சாவகச்சேரியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பதுமன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

வலி. வடக்கு பிரதேச மக்கள் தியாக தீபம் திலீபனுக்கு நேற்றும் உணர்வு பூர்வமாக ஆர்வத்துடன் அஞ்சலி செலுத்தினர்.

அளவெட்டி, மல்லாகம், மாகியப்பிட்டி, சுன்னாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தினமும் சுன்னாகம் சிவன் கோவில் [illegible] விசேட [illegible] மேற்கொண்டனர்.

[அ-15-17-162-111-5-18]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இசிலியா மிக்கேல்பிள்ளை

மயிலிட்டி மிக்கேல்பிள்ளை அன்சன் உரிமையாளர் காலஞ்சென்ற அ. மிக்கேல்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி திருமதி இசிலியா மிக்கேல்பிள்ளை 93 - 09 - 19ஆம் திகதி ஆனைக்கோட்டையில் காலமானார்.

அன்னார் ஞானமலர், ஞானப்பிரகாசம், ஞானரஞ்சிதம், ஞானரட்ணம், ஞானானந்தம் (நோர்வே), ஞானாமிர்தம், ஞானகுணரட்ணம் (ஜேர்மனி), ஞானகுலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கே. எஸ். அன்ரனிப்பிள்ளை அன்சன் உரிமையாளர் மனுவேற்பிள்ளை காலஞ்சென்ற இம்மனுவேல் பிலிப், ராஜகுமாரி (நோர்வே), தேவசகாயம், கமலேஸ்வரி (ஜேர்மனி), புவானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்ரன் ஞானேந்திரன், ஹென்றி ஜெயேந்திரன் (டென்மார்க்), ஜோர்ஜ் குலேந்திரன் (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), றோஸ் வித்தா, புஸ்பராணி, கிறேஸ்ராணி, ஞானராணி (லண்டன்), அன்ரன் ஞானராஜ் (சுவிஸ்), பிறேம்ராஜ் (சுவிஸ்), சுஜேந்திரா, கல்பனா, லூட்ஸ் ரவீந்திரன், (நோர்வே), அன்ரனி ஜெனிற்றா (ஜேர்மனி), ஆன் சுகில்டா, மேரிறொபினா, ஜீர்மரீனா, லூட்ஸ் சுதர்ஸன், விக்சன் (பொறியியல் மாணவன், மொறட்டுவை), நெல்சன், சுஜீவன், சுகந்தன், டினேஷ் (நோர்வே), டெனிஸ் (நோர்வே), சிறோமன், சிறான், சியந்தன், மைக் (ஜேர்மனி), கெவின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாயினி, பிரியங்கா, பிளசட்மேரி, டானியல், நிஷான், றொஷான், நித்தியா, ஜெனன்றன், டெஷான், டினூஜா, நிமலன், தர்ஷினி, தேனகா, டினோஷன், டானியல் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற பாடசாலை அதிபர் சூசைப்பிள்ளை, லூர்த்தம்மா, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மூத்த சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (93-09-20) திங்கட்கிழமை பி. ப. 4 மணியளவில் ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்,
க. ஞா. பிலிப்.
(மருமகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(27878)

## பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வரக் குருக்கள்

கொக்குவில் மாத்தனை பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள் 20-09-93 அன்று காலமானார்.

அன்னார் சாரதாம்பாளின் அன்புக் கணவரும், சதானந்த சர்மா (நயினாதீவு பிள்ளையார் கோயில்), திருமதி பாலநாகேஸ்வரி, ரஞ்சிதானந்த சர்மா (பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில்), ஏரம்பநாத சர்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், உருக்குமணிதேவி, சிவசரவணபவானந்தேஸ்வர சர்மா (அரசடிப் பிள்ளையார் கோயில்), கல்யாணி, ஹேமலதா ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீதர சர்மா (சோதிட விலாச புத்தகசாலை), சாந்தினி, சஸீவரன் (சவுதி அரேபியா), சிவகரன், காலஞ்சென்ற சிவமனோகரன், சிவமோகன், சிவகாந்தன், ஜெயகாந்தன், கஸ்தூரி, கீர்த்தி, வாசன், ஜெயராஜன், செல்வானந்தன், திவ்யசொரூபி, சனாதன், சாமிந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும், இரகுநாதசர்மா (காரைநகர்) திருமதிகள் தேவமணி, தேஜோவதி, பத்மாவதி, விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கமலாம்பிகை, காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர் மற்றும் [illegible]சரட்ண சர்மா, சோமகாந்தன், காலஞ்சென்ற சர்வேஸ்வர ஐயர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-09-1993 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்,
ச ஸ்ரீதரசர்மா (பேரன்).

மாத்தனை,
கொக்குவில்.

(27882)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் இ. ஸ்ரீகாந்

சைவப்பிரகாச குடும்பத்தில் எம்மோடு கூடி நின்று மணம் பரப்பிய மலர் இன்று இடையில் உதிர்ந்து போனது.

20-09-1993இல் அகாலமரணமடைந்த எமது வித்தியாலய மாணவன்

செல்வன் இ ஸ்ரீகாந் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அவரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"சைவப்பிரகாசம்"
வேலணை

58/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(27385)

இப்பதிப்பை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org